தினமணி

இன்றைய வேளாண் செய்திகள்

07.10.2012 P.M

08.10.2012 P.M

## மேட்டூர் அணைக்கு 30 ஆயிரம் கன அடி நீர்வரத்து



காவிரி நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் பெய்து வரும் பலத்த மழையால், மேட்டூர் அணைக்கு நீர்வரத்து ஞாயிற்றுக்கிழமை மாலை விநாடிக்கு 30 ஆயிரம் கன அடியாக அதிகரித்தது.

இதையடுத்து, திங்கள்கிழமை காலை முதல் அணையிலிருந்து விநாடிக்கு 4 ஆயிரம் கன அடி கூடுதலாக, அதாவது 18 ஆயிரம் கன அடி நீர் திறக்கப்பட உள்ளது.

மேட்டூர் அணையின் நீர் இருப்பு திருப்திகரமாக இல்லாததால், குறுவை நெல் சாகுபடிக்கு அணையிலிருந்து தண்ணீர் திறக்கப்படவில்லை.

இந்த நிலையில், சம்பா நெல் சாகுபடிக்காக செப்டம்பர் 17ஆம் தேதி மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறந்துவிடப்பட்டது. இதைத்தொடர்ந்து, அணையின் நீர்மட்டம் வெகுவாகக் குறைந்தது.

காவிரி நதி நீர் ஆணைய உத்தரவின்படி விநாடிக்கு 9 ஆயிரம் கன அடி தண்ணீரை தமிழகத்துக்கு திறந்துவிடுமாறு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டதையடுத்து, காவிரியில் கர்நாடகம் தண்ணீர் திறந்தது. இருப்பினும், பாசனத்துக்காக திறக்கப்படும் நீரின் அளவு நீர்வரத்தைவிட அதிகமாக இருந்ததால், மேட்டூர் அணையின் நீர்மட்டம் குறையத் தொடங்கியது. காவிரியின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் சனிக்கிழமை இரவு முதல் ஞாயிற்றுக்கிழமை அதிகாலை வரை பலத்த மழை பெய்தது. இதனால், மேட்டூர் அணையின் நீர்வரத்து விநாடிக்கு 10,940 கன அடியிலிருந்து 26,313 கன அடியாக அதிகரித்தது. இது ஞாயிற்றுக்கிழமை மாலை 29,926 கன அடியாக அதிகரித்ததையடுத்து, அணையின் நீர்மட்டம் உயரத் தொடங்கியது.

ஞாயிற்றுக்கிழமை மாலை மேட்டூர் அணையின் நீர்மட்டம் 71.10 அடியாக இருந்தது. பாசனத்துக்கு விநாடிக்கு 14,719 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. நீர் இருப்பு 33.65 டி.எம்.சி.யாக இருந்தது.

18 ஆயிரம் கன அடி நீர் திறப்பு: காவிரி டெல்டா பாசனத்துக்காக, மேட்டூர் அணையிலிருந்து திங்கள்கிழமை காலை முதல் திறக்கப்படும் நீரின் அளவு விநாடிக்கு 14 ஆயிரம் கன அடியிலிருந்து 18 ஆயிரம் கன அடியாக அதிகரிக்கப்படும் என்று பொதுப் பணித் துறை வட்டாரங்கள் தெரிவித்தன.

## காவிரி நீர் கிடைக்காததால் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது



காவிரி நீர் கிடைக்காததால் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது என்று நாகை மாவட்டத்தில் 2-ம் நாளாக ஞாயிற்றுக்கிழமை ஆய்வு மேற்கொண்ட மத்தியக் குழுவிடம் விவசாயிகள் முறையிட்டனர்.

மத்திய நீர்வள ஆணைய தலைமைப் பொறியாளர் ஆர்.கே. குப்தா தலைமையில், நீர்வள ஆணைய இயக்குநர் (கண்காணிப்பு) டி.கே. சிவராஜன், கண்காணிப்புப் பொறியாளர் வீரேந்திர சர்மா, பாசனத் திட்ட துணை இயக்குநர் பிரதீப் தாகூர் மற்றும் புகையிலை மேம்பாட்டுக் கழக இயக்குநர் கே. மனோகரன் ஆகியோர் அடங்கிய குழுவினர் ஞாயிற்றுக்கிழமை 2-ம் நாள் ஆய்வாக நாகை செல்லூரில் நேரடி விதைப்பு செய்யப்பட்டு, தண்ணீர் இல்லாமல் காய்ந்த நிலையிலிருந்த நெல் பயிர்களை பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

இதைத் தொடர்ந்து, தரங்கம்பாடி வட்டத்துக்குள்பட்ட அனந்தமங்கலம், எருக்கட்டாஞ்சேரி, சீர்காழி ஊராட்சி ஒன்றியத்துக்குள்பட்ட அண்ணன்பெருமாள் கோவில் உள்ளிட்ட இடங்களில் தண்ணீர் இல்லாமல் காய்ந்து கருகும் நிலையை அடைந்துள்ள நெல் பயிர்களை மத்தியக் குழுவினர் பார்வையிட்டனர். இந்த ஆய்வுகளின்போது, அந்தந்தப் பகுதிகளைச் சேர்ந்த முன்னோடி விவசாயிகள் கர்நாடகத்திலிருந்து தமிழகத்துக்கு உரிய அளவில் காவிரி நீர் கிடைக்கப் பரிந்துரைக்க வேண்டும் எனவும், காவிரி நீர் கிடைக்காமல் தங்கள் வாழ்வாதாரம் பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளதாகவும் மத்தியக் குழுவினரிடம் முறையிட்டனர்.

மயிலாடுதுறை தொகுதி மக்களவை உறுப்பினர் ஓ.எஸ். மணியன், நாகை ஊராட்சி ஒன்றியக் குழு உறுப்பினர் தங்க. கதிரவன் மற்றும் விவசாய சங்கங்களின் பிரதிநிதிகள், காவிரி நீர் தேவை குறித்த கோரிக்கை மனுக்களை, மத்தியக் குழுவினரிடம் அளித்தனர்.

ஓரிரு நாள்களில் அறிக்கை: நாகை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் காவிரி நீர் தேவை குறித்து ஆய்வு மேற்கொண்ட மத்தியக் குழுவினர், ஆய்வுகளின்போது விவசாயிகள் தெரிவித்த கருத்துகள் மற்றும் தங்கள் ஆய்வறிக்கை ஆகியவற்றை ஓரிரு நாள்களில் மத்திய நீர்வள ஆணையத்திடம் சமர்ப்பிக்கப்படும் எனத் தெரிவித்தனர்.

சிதம்பரத்தில் ஆய்வு: கடலூர் மாவட்டத்தில் உள்ள காவிரி டெல்டா கடை மடை பகுதியான சிதம்பரம், காட்டுமன்னார்கோவில் தாலுகாக்களில் மத்தியக் குழுவினர் ஞாயிற்றுக்கிழமை ஆய்வு மேற்கொண்டனர்.

7th oct 2012 P.M

## விதைகளுக்கு 5 சதவீத மானியம்: பாரத் நிர்மாண் கண்காட்சியில் தகவல்

காஞ்சிபுரம், அக். 6: ஒருங்கிணைந்த கிராம உணவு உற்பத்தித் திட்டத்தின் கீழ் விதைக்காக மத்திய அரசு 5 சதவீத மானியம் அளிப்பதாக வேளாண் அலுவலர் தில்லைக்கரசி தெரிவித்தார்.

காஞ்சிபுரம் மாவட்டம் மதுராந்தகத்தில் பாரத் நிர்மாண் கருத்தொளி இயக்கக் கண்காட்சி கடந்த 3 நாள்களாக நடந்தது. இதனை காஞ்சிபுரம் எம்.பி. விஸ்வநாதன் தொடக்கி வைத்தார்.

÷இக்கண்காட்சியை மதுராந்தம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளைச் சேர்ந்த ஆயிரக்கணக்கானோர் பார்வையிட்டனர். கண்காட்சியின் போது ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சித்தா மற்றும் ஆயுர்வேதம் இலவச மருத்துவ முகாமில் ஏராளமான மக்கள் பங்கேற்று பயனடைந்தனர்.

நிறைவு நாளான சனிக்கிழமை கிராமப்புற வேளாண் திட்டம் குறித்த கருத்தரங்கம் நடைபெற்றது. இதில் வேளாண் அலுவலர் தில்லைக்கரசி பேசுகையில், ஒருங்கிணைந்த கிராம உணவு உற்பத்தித் திட்டத்தின் கீழ் விதைக்காக அரசு 5 சதவீத மானியம் அளிக்கிறது.

÷கிராம மக்கள் இதைப் பயன்படுத்தி வேளாண்மை உற்பத்தியை அதிகரிக்க வேண்டும். அதே போல ஒவ்வொரு வீட்டிலும் ஒரு மரம் வளர்த்து இயற்கையை நாம் பேணிக்காக வேண்டும் என்றார்.

இது தவிர அனைவருக்கும் கல்வித் திட்டம், சுகாதாரத் திட்டம், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உத்தரவாதத் திட்டம், தகவல் பெறும் உரிமைச் சட்டம் போன்றவை குறித்து சிறப்பு கலந்தாய்வுகள் நடைபெற்றன.

÷மாணவ, மாணவிகளுக்கான சிறப்பு வழிகாட்டி நிகழ்ச்சியும், பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவிகளின் கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. மதுராந்தகம் நகராட்சி ஆணையர் அ.பாஸ்கர், அரங்குகள் அமைத்த துறைகளுக்கு நினைவுப்பரிசும் சான்றிதழும் வழங்கினார். இதில் பத்திரிகை தகவல் அலுவலகத்தின் இணை இயக்குநர் பிரசாத், இசை நாடகப்பிரிவின் துணை இயக்குநர் விஜயராகவன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## பவானிசாகர் நீர்மட்டம்

பவானிசாகர் அணையின் நீர்மட்டம் சனிக்கிழமை நிலவரப்படி 29.75 அடியாக இருந்தது. அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி. அணைக்கு விநாடிக்கு 752 கனஅடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் விநாடிக்கு 700 கனஅடி நீர் வந்தது. வாய்க்காலில் பாசனத்துக்காக தண்ணீர் திறக்கப்படவில்லை. அணையில் நீர் இருப்பு 1.14 டி.எம்.சி.

## பயறு உற்பத்தி விளக்கக் கூட்டம்

அனக்காவூர் வட்டாரத்தைச் சேர்ந்த விவசாயிகளுக்கு விரைவுபடுத்தப்பட்ட பயறு உற்பத்தித் திட்டம் குறித்த செயல்விளக்கக் கூட்டம் சனிக்கிழமை நடைபெற்றது.

கூட்டத்துக்கு தலைமை வகித்து வேளாண்மை உதவி இயக்குநர் ஏழுமலை பேசும் போது, பயறு வகைப் பயிர்களின் விளைச்சலை அதிகரிக்கும் நோக்கத்தில் தேத்துறை, மடிப்பாக்கம், கீழ்நோத்தப்பாக்கம் ஆகிய கிராமங்களில் 100 ஹெக்டேர் பரப்பளவில் வரும் ராபி பருவத்தில் உளுந்து செயல்விளக்கம் அமைக்கப்படவுள்ளது. இதில் உளுந்து விதை, விதை நேர்த்தி மருந்து, உயிர் உரங்கள் மற்றும் பூச்சி மருந்துகள் முதலியன வழங்கப்படவுள்ளன.

இத்திட்டத்தில் பங்கு பெறும் விவசாயிகள் தங்கள் வயலில் மண்மாதிரி எடுத்துப் பரிசோதனை செய்ய வேண்டும். மேலும் பயிரிடும் பரப்பு முழுவதையும் விதைப்பண்ணை அமைத்து, விதை கொள்முதல் செய்ய விவசாயிகள் உதவ வேண்டும் என்றார்.

உதவி அலுவலர்கள் த.கிருஷ்ணமூர்த்தி, குமார், உதவி விதை அலுவலர் ஆ.சௌந்தரபாண்டியன், என்.எப்.எஸ்.எம். உதவியாளர் ரஞ்சித்குமார் மற்றும் விவசாயிகள் பலரும் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

## பருவமழை தொடங்கும் வரை காவிரியில் தமிழகத்துக்கு தண்ணீர்



சம்பாவைக் காப்பாற்ற பருவமழை தொடங்கும் வரை காவிரியில் தமிழகத்துக்கு தண்ணீர்விட பரிந்துரைக்க வேண்டும் என திருவாரூர் மாவட்டத்துக்கு சனிக்கிழமை வந்த மத்திய நீர்வள ஆணையக் குழுவிடம் விவசாயிகள் முறையிட்டனர்.

தமிழக, கர்நாடக மாநிலங்களுக்கு இடையேயான நதிநீர் பிரச்னைகளின் தன்மையை அறிவதற்காக மத்தியக் குழு தமிழகத்தில் ஆய்வு நடத்தி வருகிறது. காவிரி டெல்டா பகுதிகளில் நீரின் தேவை குறித்து வெள்ளிக்கிழமை தஞ்சாவூர் மாவட்டத்தில் ஆய்வு செய்த மத்திய நீர்வள ஆணையத்தின் தலைமைப் பொறியாளர் ஆர்.கே. குப்தா தலைமையிலான குழு சனிக்கிழமை திருவாரூர் மாவட்டத்தில் 13 இடங்களில் ஆய்வு நடத்தியது.

முதலில் மன்னார்குடி அருகே கருவக்குளம் பகுதியில் நேரடி நெல் விதைப்புப் பகுதியில் குழுவினர் ஆய்வு செய்தனர். அப்போது விவசாயி மன்னார்குடி ரெங்கநாதன் குழுவிடம் தெரிவித்தது:

பாசனத்துக்கு நாள்தோறும் 2.5 டிஎம்சி தண்ணீர் தேவை. மாவட்டத்தில் நேரடி நெல் விதைப்பு அதிகம் செய்யப்பட்டுள்ள நிலையில், இரு மாநில நீர்ப் பகிர்வு முடிவுக்கு வராததால், நேரடி நெல் விதைப்பு பயிரையாவது பாதுகாக்க அக்டோபர் 20-ம் தேதி வரை நாள்தோறும் 1.5 டிஎம்சி தண்ணீர் தேவை. பருவமழை தொடங்கியதும் ஓரளவு சமாளித்துக்கொள்ளலாம் என்றார்.

முதல் பகுதியில் ஆய்வை முடித்து மத்தியக் குழுவினர் புறப்பட்ட போது, அங்கிருந்த விவசாயக் கூலித்தொழிலாளர்கள் குழுவினரிடம், எங்களுக்கு விவசாயம்தான் பிரதான தொழில். வாழ்வாதாரமும் அதுதான். எனவே, கர்நாடகத்திடமிருந்து தண்ணீர்ப் பெற்றுக் கொடுக்க வேண்டும் என்றனர்.

தொடர்ந்து மழவராயநல்லூர் பகுதியில் நேரடி நெல்விதைப்பு வயலில் குழுவினர் இறங்கி காய்ந்த நிலையிலுள்ள பயிர்களை பிடுங்கிப்பார்த்து ஆய்வு செய்தனர்.

அப்போது, திருத்துறைப்பூண்டி சட்டப்பேரவைத் தொகுதி உறுப்பினர் கே. உலகநாதன் மற்றும் விவசாயிகள், குழுவினரிடம் தெரிவித்தது:

நடவுப் பணியைத் தொடர கர்நாடகத்திடமிருந்து நாள்தோறும் 2 டிஎம்சி காவிரி தண்ணீரைப் பெற்றுக் கொடுக்க பரிந்துரைக்க வேண்டும் என்றனர்.

இதேபோல, மத்தியக் குழுவினர் கருப்புக்கிளார், சங்கேந்தி, உப்பூர், பிண்ணத்தூர், அம்மல்லூர், கள்ளிக்குடி, வேலூர், பழையங்குடி, கோமல் ஆகிய பகுதிகளில் ஆய்வு செய்தனர்.

அனைத்து இடங்களிலும் குழுவினரிடம் விவசாயிகள் கூறியது:

அக்டோபர் 20-ம் தேதி வரை நாள்தோறும் 2 டிஎம்சி தண்ணீர் பெற்றுக் கொடுக்க வேண்டும். பருவமழை தொடங்கும் வரை கர்நாடகத்திடமிருந்து தமிழகத்துக்கு தண்ணீர் கிடைக்கும் வகையில் பரிந்துரை செய்ய வேண்டும் என்றனர்.

விவசாய கூலித் தொழிலாளர்கள் குழுவிடம் தெரிவித்தது: நேரடி நெல் விதைப்பில் இன்னும் இரண்டு, மூன்று நாள்களில் தண்ணீர் பாய்ச்சவில்லையெனில், பயிர்கள் கருகிப்போய்விடும். சாகுபடி இல்லையென்றால், கால்நடைகளுக்கு தீவனம்கூட கிடைக்காமல் போய்விடும் என்றனர்.

விவசாயிகள், விவசாயக் கூலித்தொழிலாளர்களின் கருத்துகளை மத்தியக் குழுவினர் பதிவுசெய்து கொண்டனர்.

ஆய்வின் முடிவில், மத்தியக் குழுவில் இடம்பெற்ற மத்திய புகையிலை மேம்பாட்டு இயக்குநர் கே. மனோகரன் அளித்த பேட்டி:

மாவட்டத்தில் விவசாயிகள் பயிரிடுவதற்கு ஏற்ப நிலத்தைத் தயார் செய்துள்ளனர். பயிர்கள் நீர் இல்லாததால் எல்லா இடங்களிலும் பாதிக்கப்பட்டுள்ளன. திருவாரூரில் சனிக்கிழமை ஆய்வுப் பணியை முடித்து, ஞாயிற்றுக்கிழமை நாகப்பட்டினம் மாவட்டத்தில் ஆய்வை முடித்து, கடலூர் மாவட்டத்தின் சில பகுதிகளை ஆய்வு செய்யவுள்ளோம். அக்டோபர் 8-ம் தேதி தமிழக அரசுச் செயலர்கள் கூட்டத்தில் ஆலோசனை நடத்திவிட்டு, விரைவில் மத்திய அரசிடம் ஆய்வு அறிக்கைகளை அளிக்கவுள்ளோம் என்றார்.

ஆய்வின் போது, மாவட்ட ஆட்சியர் சி. நடராசன், மாவட்ட வருவாய் அலுவலர் ந. ஜீவகனி ஆகியோர் உடனிருந்தனர்.

நாகையில்...: இதேபோல, நாகை மாவட்டம், கிள்ளுக்குடி, மானலூர், எட்டுக்குடி, திருவாய்மூர், சீராவட்டம், மணக்குடி, ஈசனூர், கீழையூர், திருப்பூண்டி உள்ளிட்ட பகுதிகளில் வறட்சியால் பாதிக்கப்பட்ட சம்பா சாகுபடி நிலங்களை மத்தியக் குழுவினர் சனிக்கிழமை பார்வையிட்டனர்.

தினமலர்

இன்றைய வேளாண் செய்திகள்

08.10.2012 A.M

## துளிர் விட்டதால் பல லட்Œம் தேங்காய் @தக்கம்:விற்க முடியாமல் வியாபாரிகள் தவிப்பு



சேலம்:மண்டிகளில் வியாபாரிகள் இருப்பு வைத்த, பல லட்சத்துக்கும் மேற்பட்ட தேங்காய்கள் சமீபத்தில் பெய்த மழையால், துளிர் விட்டதால் விற்பனை செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.சேலம் மாவட்டம், நங்கவள்ளி, ஜலகண்டபுரம், தாரமங்கலம், வனவாசி உள்ளிட்ட சுற்றுப் பகுதிகளில், 50க்கும் மேற்பட்ட தேங்காய் மண்டிகள் உள்ளன.

மகாராஷ்டிரா:வியாபாரிகள் சுற்றுப்பகுதி விவசாயிகளிடம் கொள்முதல் செய்யும் தேங்காய்களை, மண்டியில் நார் உரித்து மகாராஷ்டிரா, குஜராத், ராஜஸ்தான், மேற்கு வங்காளம் உள்ளிட்ட வெளிமாநிலங்களுக்கு விற்பனைக்கு அனுப்பி வைக்கின்றனர். சீசன் காலங்களில் மட்டும் ஜலகண்டபுரம் சுற்றுப்பகுதியில் இருந்து தினமும், 10 லட்சம் தேங்காய்களுக்கு மேல் வெளிமாநிலங்களுக்கு அனுப்பி வைக்கப்படும். நடப்பாண்டு தேங்காய் உற்பத்தி அதிகரித்த நிலையில், ஜூலை மாதம், ஆறு ரூபாய்க்கு வெளிமாநிலங்களுக்கு விற்பனை செய்த தேங்காய், செப்டம்பர் மாதம், நான்கு ரூபாய் 50 காசாக வீழ்ச்சியடைந்தது.விலை, 25 சதவீதம் வீழ்ச்சியடைந்ததால் விரக்தியடைந்த வியாபாரிகள் வெளிமாநிலங்களுக்கு தேங்காய்களை அனுப்பாமல், தங்கள் மண்டியிலேயே இருப்பு வைத்தனர்.

ஜலகண்டபுரம் சுற்றுப்பகுதியில் மட்டும், 50 லட்சம் தேங்காய்கள் இருப்பு வைக்கப்பட்டன. விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு, தேங்காய் விலை அதிகரிக்கும் என, எதிர்பார்க்கப்பட்டது.ஆனால், தேங்காய் விலை அதிகரிக்காதது வியாபாரிகளுக்கு ஏமாற்றத்தை அளித்துள்ளது. தேங்காய்களை, 90 நாட்களுக்கு மேல் இருப்பு வைத்தால் அழுகி விடும். ஏற்கனவே இரு மாதம் இருப்பு வைத்த நிலையில், சில நாட்களுக்கு முன் பெய்த மழையால், பெரும்பாலான தேங்காய் துளிர்த்து விட்டது. இதனால், வியாபாரிகள் அதிர்ச்சியில் ஆழ்ந்துள்ளனர்.விரக்தி;இது குறித்து, ஜலகண்டபுரம் மண்டி உரிமையாளர் குட்டியப்பன் கூறியதாவது:மண்டியில், ஒரு லட்சம் தேங்காய் இருப்பு வைத்ததில், மழையால், 65 ஆயிரம் தேங்காய்கள் துளிர்த்து விட்டன. இந்த தேங்காய்களை விற்பனைக்கு அனுப்ப முடியாது. மீதமுள்ள, 35 ஆயிரம் தேங்காய்களை கட்டாயம் விற்பனைக்கு அனுப்ப வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. துளிர் விட்ட தேங்காய்களை வெட்டி உலர வைத்து எண்ணெ# நிறுவனத்துக்குத்தான் அனுப்ப முடியும். துளிர் விட்ட தேங்காய்களால், பல லட்சம் ரூபாய் இழப்பு ஏற்பட்டுள்ளது.ஜலகண்டபுரம் சுற்று வட்டார பகுதி மண்டிகளில் இருப்பு வைத்த, 25 லட்சத்துக்கும் மேற்பட்ட தேங்காய்கள் துளிர் விட்டதால், பல லட்சம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டுள்ளது. இதனால், வியாபாரிகள் கடும் விரக்தியில் உள்ளனர்.இவ்வாறு அவர் கூறினார்.

## தமிழகத்தில் சர்க்கரை உற்பத்தி அதிகரிப்பு



சென்னை:சென்ற, 2011-12ம் சர்க்கரை பருவத்தில் (அக்.,-செப்.,), தமிழகத்தில், கரும்பு அரவை மற்றும் சர்க்கரை உற்பத்தி, மதிப்பீட்டை விட, சிறப்பான அளவில் அதிகரித்துள்ளது. தமிழகத்தில், 43 சர்க்கரை ஆலைகள் செயல்படுகின்றன. இவற்றில், தனியார் சர்க்கரை ஆலைகளின் எண்ணிக்கை 25 ஆக உள்ளது. மேலும், 16 கூட்டுறவு ஆலைகளும், இரண்டு பொது

துறை ஆலைகளும் செயல்பட்டு வருகின்றன. சென்ற பருவத்தில், இவ்வாலைகள் அனைத்திலுமாக, 23.50 லட்சம் டன் சர்க்கரை உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.தமிழகத்தில், சென்ற பருவத்தில், சர்க்கரை உற்பத்தி, 21 லட்சம் டன்னாக இருக்கும் என, முந்தைய மதிப்பீட்டில் தெரிவிக்கப்பட்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

பரப்பளவு:நடப்பு 2012-13ம் சர்க்கரை பருவத்தில், கரும்பு பயிரிடும் பரப்பளவு, 6.80 லட்சம் ஏக்கர் என்ற அளவில் இருக்கும் என, மதிப்பிடப்பட்டுள்ளது. இது, சென்ற பருவத்தை விட, 15 சதவீதம் அதிகமாகும். அதேசமயம், நடப்பு பருவத்தில், கரும்பு பயிரிடப்பட்டுள்ள பெரும்பாலான பகுதிகளில், வறட்சி நிலையே காணப்படுகிறது. இதனால், நடப்பு பருவத்தில், சர்க்கரை உற்பத்தி, எதிர்பார்த்த அளவிற்கு அதிகரிக்காது என,தெரிகிறது.அரசு மதிப்பீட்டின் படி, கடந்த 2010-11ம் சர்க்கரை பருவத்தில், 18.46 லட்சம் டன் சர்க்கரை உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. இது, சென்ற 2011-12ம் பருவத்துடன் ஒப்பிடும் போது குறைவாகும். நடப்பு பருவத்தில், சர்க்கரை உற்பத்தி குறித்த மதிப்பீடு, டிசம்பரில் தான் தெரிய வரும்.

நாட்டின் சர்க்கரை உற்பத்தி, சென்ற 2011-12ம் பருவத்தில், 2.62 கோடி டன்னாக இருக்கும் என, மதிப்பிடப்பட்டுள்ளது. நாட்டின், கரும்பு அதிகளவில் விளையும், முக்கிய மாநிலங்களில், பருவம் தவறிய மழைப்பொழிவால், கரும்பு சாகுபடி பாதிக்கப்பட்டுள்ளது.

சென்ற பருவத்தில், நாடு தழுவிய அளவில், 52.80 லட்சம் ஹெக்டேரில் கரும்பு சாகுபடி மேற்கொள்ளப்பட்டிருக்கும் என, வேளாண் துறையின் முதல் முன்கூட்டிய மதிப்பீட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில், தற்போது, சர்க்கரைக்கான தேவை, ஆண்டுக்கு, 2.20-2.30 கோடி டன் என்ற அளவில் உள்ளது. இந்நிலையில், கரும்பு மற்றும் சர்க்கரை உற்பத்தி குறைந்தாலும், அது உள்நாட்டு தேவைக்கும் அதிகமாகவே இருக்கும் என, எதிர்பார்க்கப்படுகிறது.பருவம் தவறிய மழை பொழிவால், நடப்பு 2012-13ம் கரும்பு அரவை பருவத்தில், மகாராஷ்டிரா மாநிலத்தில், கரும்பு சாகுபடி பரப்பளவு குறையும். இதனால், இம்மாநிலத்தின் சர்க்கரை உற்பத்தி, 30 சதவீதம் குறைய வாய்ப்புள்ளது.

உத்தர பிரதேசம்:இருப்பினும், அதிகளவில் கரும்பு உற்பத்தியாகும் உத்தர பிரதேச மாநிலத்தில், கரும்பு சாகுபடியும், சர்க்கரை உற்பத்தியும் அதிகரிக்கும் என, தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனால், ஒட்டுமொத்த அளவில், சர்க்கரை உற்பத்தியில் அதிக பாதிப்பு இருக்காது என்ற மதிப்பீடும் உள்ளது.Œõகுபடி:கடந்த ஆண்டு, நாட்டின் மொத்த சர்க்கரை உற்பத்தியான, 2.60 கோடி டன்னில், மகாராஷ்டிராவின் பங்களிப்பு, 89 லட்சம் டன்னாக இருந்தது.

இந்நிலையில், மகாராஷ்டிராவில், நடப்பு பருவத்தில் கரும்பு உற்பத்தி குறையும் என்ற மதிப்பீட்டால், இம்மாநிலத்தின் சர்க்கரை உற்பத்தி, 62 லட்சம் டன்னாக குறையும்.
ஆனால், உத்தரபிரதேச மாநிலத்தில், கூடுதலாக, 90 ஆயிரம் ஹெக்டேரில் கரும்பு சாகுபடி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதையடுத்து, இங்கு சர்க்கரை உற்பத்தி அதிகரிக்கும். இதனால், நாட்டின் சர்க்கரை உற்பத்தியில், அதிக பாதிப்பு இருக்காது. உத்தர பிரதேச மாநிலத்தில், கரும்பு சாகுபடி பரப்பளவு, 22.70 லட்சம் ஹெக்டேரில் இருந்து, தற்போது, 23.60 லட்சம் ஹெக்டேராக அதிகரித்துள்ளதாக, அரசு, வெளியிட்டுள்ள புள்ளி விவரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சின்ன வெங்காயம் விலை உயர்வு



சேலம்:கர்நாடகாவில் இருந்து, தமிழகத்துக்கு விற்பனைக்கு வந்து கொண்டிருந்த, சின்ன வெங்காயம் வரத்தில் சரிவு ஏற்பட்டுள்ளது. அதனால், சின்ன வெங்காயம் விலை உயர்ந்துஉள்ளது.தமிழகத்தில், சேலம், பொள்ளாச்சி, உடுமலைப்பேட்டை ஆகிய இடங்களில், அதிக அளவில், சின்ன வெங்காயம் விளைகிறது. ஆனால், நடப்பு ஆண்டில் சின்ன வெங்காய விளைச்சல், எதிர்பார்த்த அளவு இல்லை. தமிழகத்துக்கு, அதிக அளவில், கர்நாடக மாநிலம் மைசூரின் குண்டல்பேட்டை, நகரம், தர்க்கனப்பள்ளி, ஆந்திர மாநிலம் ரேணிகுண்டா ஆகிய இடங்களில் இருந்து விற்பனைக்கு வந்து கொண்டிருந்த சின்ன வெங்காயத்தின் வரத்து, சில நாட்களாக, முற்றிலும் நின்று விட்டது.
மகாராஷ்டிரா, உத்தரபிரதேசம், குஜராத், பீகார் உள்ளிட்ட வடமாநிலங்களில் இருந்து, கடந்த மாதம் வரை, நாள் ஒன்றுக்கு, 1,500 டன் சின்ன வெங்காயம் விற்பனைக்கு வந்து கொண்டிருந்தது.இந்த வெங்காயத்துக்கு, தமிழகத்தை விட, ஆந்திராவில், கூடுதல் விலை கிடைப்பதால், வடமாநில வியாபாரிகள், வெங்காயத்தை, ஆந்திர மாநிலத்துக்கு அனுப்பி

வருகின்றனர்.வெளிமாநில வெங்காயத்தின் வரத்தில், கடும் சரிவு ஏற்பட்டுள்ள நிலையில், தமிழகத்தின், சேலம், உடுமலைப்பேட்டை, பொள்ளாச்சி, ஒட்டன்சத்திரம் ஆகிய இடங்களில் வெங்காய சீசன் முடிவுக்கு வந்து விட்டது.

இதன் காரணமாக, தமிழக Œந்தைகளில், சின்ன வெங்காயத்துக்கு கடும் கிராக்கி நிலவி வருகிறது.சின்ன வெங்காயத்தின் விலை, கிலோவுக்கு, 12 ரூபாய் வரை, உயர்ந்துள்ளது. 2,100 ரூபாய்க்கு விற்ற, 75 கிலோ மூட்டை சின்ன வெங்காயம், 3,000 ரூபாயாக அதிகரித்துள்ளது. இது, சில்லரை விற்பனையில், கிலோ, 40 ரூபாய்க்கு விற்கப்படுகிறது.சின்ன வெங்காயத்தின் விலை, இரண்டு மடங்காக அதிகரித்துள்ள நிலையில், பெரிய வெங்காயத்தின் விலையும் உயர்ந்துள்ளது. மகாராஷ்டிர மாநிலத்தில் இருந்து, சேலத்துக்கு விற்பனைக்கு வந்து கொண்டிருந்த பெரிய வெங்காயம் வரத்து, பாதியாக குறைந்துவிட்டது.சேலத்தில், பெரிய வெங்காயம், கிலோ, 15 முதல், 17 ரூபாய் வரையும், 50 கிலோ மூட்டை, 750 முதல், 850 ரூபாய் வரையும் விற்பனை செய்யப்படுகிறது.

## ருசி மிகுந்த "ரெட்லேடி' பப்பாளி பயிர் செய்ய விவசாயிகள் ஆர்வம்

கெங்கவல்லி: கெங்கவல்லி அருகே, ருசி மிகுந்த, மருத்துவ குணம் வாய்ந்த, "ரெட்லேடி' பப்பாளி பழத்தை பயிர் செய்வதில், விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.கெங்கவல்லி அருகே ஒதியத்தூர் கிராமத்தை சேர்ந்தவர் விவசாயி கந்தசாமி மகன் முருகேசன். அவர், சொட்டு நீர் பாசனத்தை பயன்படுத்தி, விவசாய நிலத்தில் உயர் ரக, "ரெட்லேடி' பப்பாளி செடியை, ஒரு ஏக்கர் நடவு செய்துள்ளார்.நடவு செய்த ஆறு மாதத்தில், ஒரு செடிக்கு, 200 காய்கள் பிடிக்கத் துவங்கி அறுவடைக்கு தயாராகி விடுகிறது. தொடர்ந்து, இரண்டரை ஆண்டுகள் வரை, காய் வைக்கிறது. ஒவ்வொரு காய்கள், இரண்டு கிலோ முதல் நான்கு கிலோ எடை கொண்டதாகவும், ருசி மிகுந்தும் உள்ளது.இதை சாப்பிட்டால், ரத்தத்தை சுத்திகரிப்பு செய்வதாகவும், உடலுக்கு மெருகூட்டுவதாகவும் கூறப்படுகிறது. அதனால், சுற்றுவட்டார பகுதிகளில் இருந்து மட்டுமின்றி, வெளி மாவட்டங்களை சேர்ந்த வியாபாரிகள், பப்பாளி பழங்களை அதிகளவில் வாங்கிச் செல்கின்றனர்.மேலும், அதிக காய்கள் பிடித்தாலும், வளர்ச்சி குறைந்து காணப்படுவதால், பலத்த காற்றுக்கு மரங்கள் முறிவதில்லை. குறைந்த செலவில், அதிக வருவாய் கிடைப்பதால், "ரெட்லேடி' பப்பாளி செடிகளை அதிகளவில் பயிரிட, விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.இதுகுறித்து, விவசாயி முருகேசன் கூறியதாவது:ஒரு ஏக்கர் விவசாய நிலத்தில், சொட்டு நீர் பசான முறையில், 1,000 "ரெட்லேடி' பப்பாளி செடியை நடவு செய்துள்ளேன். இந்த செடி நடவு செய்த ஆறு

மாதத்தில், ஒரு செடியில், 200க்கும் மேற்பட்ட காய்கள் பிடித்து அறுவடைக்கு தயாராகிறது.குறைந்த நிலப்பரப்பில் பயிர் செய்யும், "ரெட்லேடி' பப்பாளி செடிகள் மூலம், கணிசமான வருவாய் கிடைத்து வருகிறது.இவ்வாறு கூறினார்.

## தர்மபுரியில் கன மழை: விவசாயிகள் மகிழ்ச்சி

தர்மபுரி: தர்மபுரி மாவட்டத்தில் பெய்த கன மழையால், விவசாயிகள் மகிழச்சி அடைந்துள்ளனர்.தர்மபுரி மாவட்டத்தின் பல பகுதிகளில், நேற்று முன்தினம் நள்ளிரவு முதல், காலை, 8.30 மணி வரை கனமழை பெய்தது. இதனால், மாவட்டத்தின் பல பகுதிகளில் உள்ள சாலைகள் மற்றும் விவசாய நிலங்களில் மழை நீர் பெருக்கெடுத்து ஓடியது. மாவட்டத்தில் அதிகபட்சமாக தர்மபுரி நகரில், 80 மில்லி மீட்டர் மழை பெய்ததால், சாலைகள் மற்றும் தெருக்களில் மழை நீருடன் கழிவு நீர் ஓடியது.குமாரசாமிபேட்டையில் பென்னாகரம் சாலையில் உள்ள சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் தெப்பத்தில் போதிய தடுப்பு சுவர் இல்லாததால் மழை நீருடன் சேர்ந்து கழிவு நீரும் தேங்கி தெப்பம் நிறைந்தது. தெப்பத்தில் தண்ணீர் நிறைந்ததால் அருகில் உள்ள குடியிருப்பு பகுதிகளில் துர்நாற்றம் வீசிவருகிறது.பாப்பிரெட்டிப்பட்டி, 60 மி.மீ., அரூர், 33 மி.மீ, பாலக்கோடு, 8.30 மி.மீ, மாரண்டஅள்ளி, 5 மி.மீ, மழையளவு பதிவானது. தர்மபுரி மாவட்டத்தில், சில தினங்களாக பெய்து வரும் மழையினால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். நேற்று பெய்த கன மழை காரணமாக, மாவட்டத்தின் பெரும்பலான பகுதிகளில் குளுமையான சீதோஷ்ண நிலை நிலவியது.

## செறிவூட்டப்பட்ட தொழு உரம் தயாரிக்க 50 சதவீதம் மானியம்

ராசிபுரம்: "செறிவூட்டப்பட்ட தொழு உரம் தயாரிக்க, 50 சதவீதம் மானியம் வழங்கப்படுகிறது' என, புதுச்சத்திரம் வட்டார வேளாண் உதவி இயக்குனர் ராஜகோபால் தெரிவித்துள்ளார்.அவர் வெளியிட்ட அறிக்கை:மண்வளத்தை அதிகரிக்க, தொழு உரம் வயலில் அடியுரமாக இடுதல் அவசியமாகிறது. பண்ணையில் கிடைக்கும் கழிவுகளை குழியில் இட்டு மக்க வைத்து கிடைப்பதே, செறிவூட்டபட்ட தொழு உரம். புதுச்சத்திரம் வட்டாரத்தில், நடப்பு ஆண்டில் தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ், பண்ணை கழிவுகளை பயன்படுத்தி செறிவூட்டப்பட்ட தொழு உரம் தயாரிக்க, பத்து விவசாயிகளுக்கு, 50 சதவீதம் மானியம் வழங்கப்பட உள்ளது.இத்திட்டத்தின் கீழ், 15 அடி நீளம், ஆறு அடி அகலம், இரண்டு அடி ஆழம் உள்ள எரு குழிகள் வெட்டி, அதில் ஒரு ஏக்கருக்கு தேவையான செறிவூட்டப்பட்ட தொழுஉரம் தயார்

செய்யலாம். அதற்கு, கால்நடை கழிவுகள், 750 கிலோ, 150 கிலோ சூப்பர் பாஸ்பேட், 100 கிலோ யூரியா, இரண்டு கிலோ சூடோமோனாஸ், பத்து பாக்கெட் உயிர் உரம் ஆகியவற்றை கலந்து எருக்குழியில் இட்டு, மேற்புறம் ஈர மண் கொண்டு பூசி, 45 நாட்களுக்கு மூடி வைக்க வேண்டும்.அதில் இருந்து, ஒரு ஏக்கருக்கு தேவையான, 750 கிலோ செறிவூட்டிய தொழு உரம் கிடைக்கும். மேற்கண்ட எருக்குழி அமைக்க, 50 சதவீதம் மானியமாக, 2,236 ரூபாய் வழங்கப்படும். தேவைப்படும் விவசாயிகள், புதுச்சத்திரம் வேளாண் விரிவாக்க மையத்தில் உள்ள முன்னுரிமை பதிவேட்டில் பதிவு செய்து பயன்பெறலாம்.இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## தடையில்லா சான்று குழப்பத்தால் விவசாயிகள் பெரும் தவிப்பு!

சேலம்: சரபங்கா நதி அருகே வெட்டப்பட்டுள்ள கிணறுகளுக்கு, மின் இணைப்பு வழங்க அதிகாரிகள் மறுக்கின்றனர். பொதுப்பணித்துறையினர் தடையில்லா சான்று தேவையில்லை என கூறியபோதும், மின்வாரியம் கேட்கிறது. இதற்கு உரிய விளக்கத்தை அளிக்க வேண்டும் என விவசாயிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.மேட்டூர் மின் பகிர்மான வட்டத்தில், மேட்டூர் மற்றும் சங்ககிரி மின் கோட்டம் செயல்பட்டு வருகிறது. இந்த பகுதியில், ஆயிரக்கணக்கான ஏக்கரில், கரும்பு, சோளம், வாழை, நெல், மலர் வகை பயிரிடப்பட்டுள்ளன.காவிரி ஆற்றுப்பாசனம் இல்லாததால், விவசாயிகள் கிணறுகளை நம்பியே விவசாயம் செய்து வருகின்றனர். இந்த பகுதியில், சரபங்கா நதி உள்ளது. நதி துவங்கும் இடத்தில் இருந்து முடியும் எல்லை வரை, எந்த இடத்திலும் தடுப்பணை கிடையாது. மழைக்காலத்தில் மட்டும், இந்த நதியில் தண்ணீர் நிரம்பியிருக்கும்.சரபங்கா நதி ஒரு காட்டாறு தானே தவிர, தண்ணீர் எப்போதும் ஓடும் முழுமையான ஆறு இல்லை. ஆற்றின் கரையோர பகுதிகளில் உள்ள விவசாயிகள், திறந்தவெளி கிணறு, ஆழ்துளை கிணறு அமைக்கும்போது, மின் இணைப்பு பெறுவதற்கு பல்வேறு இடர்பாடுகளை, மின்வாரியம் ஏற்படுத்தி வருகிறது.பொதுப்பணித்துறை அதிகாரிகள், "சரபங்கா ஆற்றுப்படுக்கையில், விவசாய மின் இணைப்பு பெறுவதற்கு, தடையில்லா சான்று எங்கள் துறையிடம் பெற வேண்டிய அவசியமில்லை' என, கூறியுள்ளனர்.ஆனால், மேட்டூர் மின் பகிர்மான வட்டத்தில், தடையில்லா சான்று வேண்டும் என கேட்டு தொந்தரவு செய்கின்றனர். மின் இணைப்பு பெற முடியாததால் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். பயிர்கள் கருகி நாசமடையும் நிலையில் உள்ளது. எங்களுடைய பிரச்னைகள் குறித்து, மின்வாரிய அதிகாரிகளிடம் தெரிவித்தும் அவர்கள் கண்டுகொள்ள மறுக்கின்றனர். சரபங்கா ஆற்றுப்படுக்கை அருகில் உள்ள கிணறுகளுக்கு, தடையில்லா சான்று இல்லாமல் மின் இணைப்பு வழங்க

வேண்டும் என, மின்வாரிய தலைவர் அறிவுறுத்த வேண்டும். விவசாயிகளின் வாழ்வாதாரத்தை பாதுகாக்க வேண்டும் என, மேட்டூர், சங்ககிரி விவசாயிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.சங்ககிரி தேவூரைச் சேர்ந்த விவசாயி சுப்ரமணி கூறியதாவது:சரபங்கா நதியில் தண்ணீரே வருவதில்லை. அது ஒரு காட்டாறு. அந்த பகுதியில் உள்ள கிணறுகளுக்கு, மின் இணைப்பு வழங்க அதிகாரிகள் மறுக்கின்றனர். ஒரு புறம் சான்றிதழ் இல்லாமலே இணைப்பு கொடுக்கின்றனர். மறுபுறம் சான்றிதழ் வேண்டும் என் கட்டாயப்படுத்துகின்றனர். கேட்டால், அது நாமக்கல் மின் பகிர்மானத்துக்கு உட்பட்டது என்கின்றனர். மின்வாரியத்திலேயே பல குளறுபடி உள்ளது. விவசாயிகளின் நலன் கருதி, தடையில்லா சான்று இல்லாமல் மின் இணைப்பு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.மேட்டூர் மின்பகிர்மான வட்ட மேற்பார்வை பொறியாளர் ஹெலன் கூறியதாவது:ஆற்றுப்படுக்கையில் இருந்து, 200 மீட்டர் தொலைவில் கிணறு இருந்தால், பொதுப்பணித்துறையிடம் தடையில்லா சான்று வாங்கி வரவேண்டும். அந்த சான்று இருந்தால் தான் மின் இணைப்பு வழங்குவோம். சரபங்கா நதியை பொறுத்தவரை, தண்ணீர் இல்லாதபட்சத்திலும், அது ஆறு தான். அங்குள்ள விவசாயிகள், ஓடையென கூறி, சான்றிதழ் வழங்காமல் இணைப்பு கேட்கின்றனர்.அது எங்களால் முடியாது. கோவை நொய்யல் ஆற்றில் கூட தண்ணீர் வரத்து இல்லை. அதற்காக அதை ஓடை என்று கூறிவிட முடியுமா? இந்த பிரச்னை குறித்து பொதுப்பணித்துறையிடமும் பேசியுள்ளோம். தடையில்லா சான்று கண்டிப்பாக வேண்டும்.இவ்வாறு அவர் கூறினார்.

## பெருந்துறை வார சந்தையில் தேங்காய் விலை வீழ்ச்சி

பெருந்துறை: பெருந்துறை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத்தில், 42 லட்சம் ரூபாய்க்கு கொப்பறை தேங்காய் விற்பனையாகியுள்ளது.பெருந்துறை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நேற்று கொப்பரை தேங்காய் ஏலம் நடந்தது. பெருந்துறை மற்றும் அதனை சுற்றியுள்ள கிராமங்களில் இருந்து விவசாயிகள், ஒரு லட்சத்து, 20 ஆயிரம் கிலோ கொப்பரை தேங்காய், 2 ஆயிரத்து, 430 மூட்டை விற்பனைக்கு கொண்டு வந்தனர். இதில் முதல் தரமான கொப்பரை தேங்காய் கிலோ, 34.25 ரூபாய் முதல், 36.10 ரூபாய் வரை ஏலம் போனது.இரண்டாம் தரம் கொப்பரை தேங்காய், 27.55 ரூபாய் முதல், 33.75 ரூபாய் வரை ஏலம் போனது. இந்த விலை கடந்த வார விலையை விட கிலோவுக்கு ஒரு ரூபாய் குறைவாகும். மொத்தம், 42 லட்சம் ரூபாய்க்கு, கொப்பரை தேங்காய் விற்பனையாகியுள்ளது.சனிக்கிழமை கூடும், பெருந்துறை வாரச் சந்தைக்கு, 11 லட்சம்

தேங்காய்கள் விற்பனைக்கு வந்தது. இதில் முதல் தரம் தேங்காய், 4 முதல், 5 ரூபாய் வரையும், இரண்டாம் தரம் தேங்காய், 3 முதல், 4 ரூபாய் வரையும், மூன்றாம் தரம் தேங்காய், 2 முதல், 3 ரூபாய் வரையும் ஏலம் போனது. இது கடந்த வார விலையை விட தேங்காய் ஒன்றுக்கு ஒரு ரூபாய் விலை குறைவாகும்.கடந்த சில வாரங்களாக பெருந்துறை வாரச் சந்தையில் தேங்காய் விலையில் பெரிய அளவில் மாறுதல் இல்லாமல் இருந்தது. ஆனால் நேற்று நடந்த விற்பனையில் தேங்காய் விலை திடீரென வீழ்ச்சியடைந்துள்ளது.கொப்பரை தேங்காய் விலை குறைந்தாதால், தேங்காய் விலையும் குறைந்ததாக விவசாயிகள் கூறினார்கள்.

## விவசாயிகள் குறை தீர்ப்பு கூட்டம்

ஊட்டி: வரும் 19ம் தேதி ஊட்டியில் விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் நடக்கிறது.நீலகிரி மாவட்ட விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் வரும் 19ம் தேதி காலை 10.30 மணிக்கு நீலகிரி மாவட்ட கலெக்டர் அர்ச்சனா பட்நாயக் தலைமையில் ஊட்டியில் நடக்கிறது.நீலகிரி மாவட்ட விவசாயிகள் பொதுவான கோரிக்கைகளை தவிர்த்து, தங்கள் விவசாயம் தொடர்பான நீர்பாசனம், இடுபொருட்கள் போன்ற கோரிக்கைகள் ஏதேனும் இருந்தால் தோட்டக்கலை இணை இயக்குனர், தபால்பெட்டி எண்-72, ஊட்டி 643001 என்ற முகவரிக்கு நேரிலோ அல்லது தபாலிலோ அனுப்பி வைக்கலாம்.

## வறட்சியால் மகசூல் குறைவு தேயிலை விவசாயிகள் கவலை

கோத்தகிரி:நீலகிரி மாவட்டத்தில் கடும் வறட்சி நிலவி வரும் நிலையில், தேயிலை தோட்டங்களில் மகசூல் குறைந்துள்ளது; இதனால், விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.நீலகிரி மாவட்டத்தில், 60 ஆயிரத்துக்கு மேற்பட்ட தேயிலை விவசாயிகள் உள்ளனர். சுமார் 2 லட்சம் தொழிலாளர்கள் இத்தொழிலை நம்பியுள்ளனர். கடந்த இரண்டு ஆண்டுகளாக, பசுந்தேயிலை ஒரு கிலோவுக்கு குறைந்தப்பட்சம் 12 ரூபாய்க்கு குறையாமல் விலை கிடைத்து வருகிறது. விவசாயிகள் ஓரளவு ஆறுதல் அடைந்துள்ளனர்.நடப்பாண்டு வழக்கத்துக்கு மாறாக, பருவ மழை பொய்த்துள்ளது. சீசன் நாட்களில், ஒரு ஏக்கருக்கு குறைந்தப்பட்சம் 5,500 கிலோ வரை மகசூல் கிடைக்கிறது. தற்போது, அதிகப்பட்சமாக 2,500 கிலோ வரை மட்டுமே கிடைப்பதால், விவசாயிகளுக்கு இழப்பு ஏற்பட்டுள்ளது. பருவ மழையை நம்பி, கடன்பெற்று, தோட்டங்களுக்கு உரமிட்ட விவசாயிகள், கூடுதல் இழப்பை சந்தித்து வருகின்றனர்.தேயிலை தோட்டங்களில் காய்ந்த செடிகள் மழை

பெய்தால் மட்டுமே, மீண்டும் துளிர்விடும் என்பதால், கிராமங்களில் மழை வேண்டி சிறப்பு பூஜைகளையும் மக்கள் நடத்தி வருகின்றனர்.

## மின் தடையால் தேயிலை தூள் உற்பத்தி பாதிப்பு

குன்னூர்:கடும் மின்சார பற்றாக்குறை காரணமாக, தொழிற்சாலைகளுக்கான மின் வினியோகம் குறைக்கப்பட்டுள்ளதால், தேயிலை தூள் உற்பத்தி கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.
தமிழகத்தில் மின் பற்றாக்குறை நிலவுவதால், தற்போது மின் வெட்டு அமல்படுத்தப்பட்டுள்ளது. சமவெளிப்பகுதிகளில், 8 முதல் 10 மணி நேரம் வரை, மின் தடை நிலவுகிறது. நீலகிரி மாவட்டத்தில், கடந்த மார்ச் மாதம் 1ம் தேதி முதல் மின் தடை தினமும் 4 மணி நேர மின்வெட்டு அமல்படுத்தப்பட்டது. நீலகிரியின் மின் தேவை குறைவாக உள்ளதையடுத்து, மே மாதம் 25ம் தேதி முதல், நீலகிரிக்கு மின் வெட்டில் இருந்து விலக்கு அளிக்கப்பட்டது.காற்றாலை மின் உற்பத்தி குறைந்துள்ளதாலும்; பருவ மழை பொய்த்து, நீர் மின் உற்பத்தி குறைந்ததாலும், தற்போது மீண்டும் கடும் மின் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

நீலகிரியில் உள்ள 100 கே.வி., பயன்படுத்தும் தொழிற்சாலைகள் மற்றும் வணிக நிறுவனங்களுக்கு, மின் வாரியம், கடந்த மாதம் 27ம் தேதி முதல், புதிய கட்டுபாடுகளை அறிவித்துள்ளது. தொழிற்சாலைகள் மற்றும் வர்த்தக நிறுவனங்களுக்கான மின் வினியோகம், 40 சதவீதம் குறைக்கப்பட்டுள்ளது. "பீக் ஹவரில்' 10 சதவீத மின்சாரத்தை மட்டுமே பயன்படுத்த வேண்டும்; பிற நேரங்களில் ஜெனரேட்டர் பயன்படுத்த வேண்டும் என, மின் வாரியம் அறிவித்துள்ளது.
நீலகிரியில் 63 ஆயிரம் சிறு, குறு விவசாயிகள் தேயிலை விவசாயத்தில் ஈடுபட்டுள்ளனர். நீலகிரியில் 8 இன்ட்கோ தொழிற்சாலைகள் மற்றும் சிறு தேயிலை தொழிற்சாலைகள் இயங்கி வருகின்றன. தற்போது மின் பற்றாக்குறையால், தொழிற்சாலைகளுக்கு புதிய கட்டுபாடுகளை மின் வாரியம் அறிவித்துள்ளதால், தேயிலை தூள் உற்பத்தி கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. சிறு தேயிலை தொழிற்சாலை உரிமையாளர்கள் கூறுகையில், ""மின் வாரியம் 100 கே.வி., பயன்படுத்தும் தொழிற்சாலைகளுக்கு 40 சதவீத மின் வினியோகம் குறைத்துள்ளது; பீக் ஹவர்களில் 10 சதவீத மின்சாரம் மட்டுமே வழங்கப்படுகிறது. ஜெனரேட்டரை பயன்படுத்த அறிவுறுத்தப்பட்டுள்ளது. தற்போது டீசல் விலை அதிகரித்துள்ளதால், தொடர்ந்து ஜெனரேட்டரை

பயன்படுத்த முடியாத நிலை தொழிற்சாலைகளில் ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக தேயிலை தூள் உற்பத்தி செய்ய முடியவில்லை" என்றனர்.

## மலை வாழைக்கு உரிய விலை இல்லை:: விவசாயிகள் குமுறல்

தாண்டிக்குடி:மலை வாழைக்கு உரிய விலை கிடைக்காததால் தாண்டிக்குடி பகுதி விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.திண்டுக்கல் மாவட்டம் தாண்டிக்குடி கீழ் பழநிமலை மற்றும் சிறுமலையில் மலை வாழை விளைச்சல் காணப்படுகிறது. உலகில் வேறு எந்த பகுதியிலும் இதன் குணங்கள் இல்லாத நிலையில் கடந்த 2008 ல் தமிழ்நாடு மலை வாழை கூட்டமைப்பு மூலம் உலக ரக உரிமம் பெறப்பட்டது. தாண்டிக்குடி (விருப்பாட்சி) ஜி.ஐ-124, சிறுமலைக்கு ஜி.ஐ-126 அங்கீகாரம் வழங்கப்பட்டது. மருத்துவ குணம் நிறைந்த இப்பழத்திற்கு சந்தையில் அதிக கிராக்கி நிலவுகிறது. இதுபோன்ற அமைப்பு கொண்ட போலியான பழங்களின் வருகையால் உண்மையான மலை வாழைப் பழங்கள் மக்களை சென்றடைவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. திருப்பதி, விவசாயி, பூலத்தூர்: காட்டு மாடு, பன்றி தாக்குதலால் மலை வாழை விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளது. முடிக்கொத்து, செந்தாழை, கூண் வண்டு தாக்குதலால் உற்பத்தி பாதித்துள்ளது. இதனால் குறைந்த அளவே விளைச்சல் இருப்பதால் செலவு செய்த தொகைக்கு தகுந்த வருவாய் இல்லை. சந்தையில் உரிய விலையும் வாழைக்கு கிடைப்பதில்லை.பிச்சை, வீரபாண்டி: பாரம்பரிய சுவை, மணம் கொ ண்ட மலை வாழைக்காய்க்கு அங்கீகாரம் கிடைத்தும், உற்பத்தியை பெருக்க நடவடிக்கை இல்லை. ஏற்றுமதியை அதிகரிக்க அரசின் உதவி தேவை.ஜெயபிரகாஷ், வியாபாரி: கடந்த 30 ஆண்டுகளாக மலை வாழைக்காய் வியபாரத்தில் ஈடுபட்டு வருகிறேன். சமீப காலமாக வியபாரத்தில் உரிய விலை கிடைக்காமல் நஷ்டத்தை சந்திக்கும் நிலை உள்ளது. திருப்பத்தூர், மைசூர் அட்டைப்பாடி, ஜவ்வாதுமலை, மடிக்கேறி வாழைபழங்களை, சந்தையில் மலை வாழை என போலியாக விற்பனை செய்வதே தாங்கள் நஷ்டத்தை சந்திப்பதற்கு காரணம். இதை ஒழுங்குபடுத்தும் பட்சத்தில் விலை கிடைக்கும்.

## காய்கறிகள்உள்ளூர்வியாபாரிகளுக்கு விற்க விவசாயிகள் மறுப்பு

கொடைக்கானல்:காய்கறிகளை அதிகமாக விளைவிக்கும் கொடைக்கானல் விவசாயிகள் அவற்றை மொத்தமாக பிற மாவட்டங்களுக்கு விற்பனை செய்வதால் உள்ளூர் வியாபாரிகள் சிரமப்படுகின்றனர்.கொடைக்கானலில் உருளைகிழங்கு, கேரட், வெள்ளை பூண்டு, பட்டர் பீன்ஸ்,

பச்சை பட்டாணி, முட்டைகோஸ், பீன்ஸ், பீட்ரூட், நூக்கல், முள்ளங்கி, கொடை மிளகாய், பஜ்ஜி மிளகாய், பவள பீன்ஸ் காய்கறிகள் விளைவிக்கப்படுகின்றன. அனைத்து காய்கறிகளையும் விவசாயிகள் மொத்தமாக மதுரை விளாங்குடியில் உள்ள ஒருங்கிணைந்த காய்கனி வணிக வளாகத்திற்கு அனுப்பி விடுகின்றனர். கொடைக்கானலில் உள்ள வியாபாரிகள் மதுரையிலிருந்து காய்கறிகளை வாங்கி உள்ளூர் மக்களுக்கு விற்பனை செய்கின்றனர். இதனால் ஒவ்வொரு காய்கறியும் அதிக விலைக்கு விற்பனை செய்யப்படுகிறது.

நேற்றைய நிலவரப்படி உருளை கிழங்கு கிலோ ரூ. 20 க்கும், கேரட் 15, வெள் ளை பூண்டு 60, பட்டர் பீன்ஸ் 80, பச்சை பட்டாணி 80, முட்டை கோஸ் 7, பீன்ஸ் 20, பீட்ரூட் 12, நூக்கல் 6, முள்ளங்கி 6, கொடை மிளகாய் 25, பஜ்ஜி மிளகாய் 20, பவள பீன்ஸ் 40, பல்லாரி 10, சின்ன வெங்காயம் 20 க்கு விற்கப்பட்டது. கொடைக்கானல் சென்ட்ரல் மார்க்கெட் வியாபாரி சக்கரை கூறுகையில்,""காய்கறிகளை விளைவிக்கும் விவசாயிகள் உள்ளூர் வியாபாரிகளுக்கு சில்லறை விலையில் விற்பனை செய்ய முன்வந்தால் குறைந்த விலையில், காய்கறிகளை வாங்கும் வாய்ப்பு அனைத்து தரப்பினருக்கும் ஏற்படும்," என்றார்.

தினகரன்

இன்றைய வேளாண் செய்திகள்

08.10.2012 A.M

## மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரிப்பு



மேட்டூர்: காவிரி நீர்பிடிப்பு பகுதிகளில் பெய்து வரும் கனமழையால், மேட்டூர் அணைக்கு வரும் நீரின் அளவு விநாடிக்கு 29 ஆயிரத்து 926 கனஅடியாக அதிகரித்துள்ளது.

கர்நாடக அணைகளில் இருந்து தமிழகத்துக்கு விநாடிக்கு 9 ஆயிரம் கனஅடி தண்ணீர் திறந்து விட வேண்டும் என காவிரி ஆணைய கூட்டத்தில் பிரதமர் பிறப்பித்த உத்தரவை நிறைவேற்றுமாறு கர்நாடக அரசுக்கு உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இதையடுத்து, கபினி மற்றும் கிருஷ்ணராஜ சாகர் அணைகளில் இருந்து விநாடிக்கு 9 ஆயிரம் கன அடி தண்ணீர் காவிரியில் திறக்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் நேற்று முன்தினம் நள்ளிரவில் கர்நாடகாவில் உள்ள காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் கனமழை பெய்தது. வனப்பகுதியில் பெய்த மழையால் காவிரியில் திடீர் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. மேட்டூர் அணைக்கு நீர்வரத்தும் அதிகரிக்கத் தொடங்கியது. நேற்று காலை 9 மணிக்கு மேட்டூர் அணைக்கு நீர்வரத்து விநாடிக்கு 10 ஆயிரத்து 940 கனஅடியாக இருந்தது. பகல் 12 மணிக்கு 26 ஆயிரத்து 313 கனஅடியாகவும், மாலை 4 மணிக்கு, 29 ஆயிரத்து 926 கனஅடியாகவும் நீர்வரத்து அதிகரித்தது. மேட்டூர் அணையில் இருந்து காவிரி

டெல்டா பாசனத்துக்கு விநாடிக்கு 14 ஆயிரத்து 719 கனஅடி தண்ணீர் திறக்கப்பட்டு வருகிறது.

அணைக்கு வரும் நீரின் அளவை விட குறை வான அளவு தண்ணீரே பாசனத்துக்கு திறக்கப்படுவதால் மேட்டூர் அணையின் நீர்மட்டம் உயரத் தொடங்கியுள்ளது. ஒகேனக்கல்லில் தடை: தர்மபுரி மாவட்டத்தில் உள்ள ஒகேனக்கல் சுற்றுலா மையத்தில் விடுமுறை நாட்களில் மக்கள் கூட்டம் நிரம்பி வரூ.யும். தர்மபுரி, கிருஷ்ணகிரி, சேலம் மட்டுமின்றி தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து சுற்றுலா பயணிகள் வந்து அருவியில் ஆர்வமுடன் குளித்து, பரிசல் சவாரி செல்வது வழக்கம். இதனால், ஒகேனக்கலில் உள்ள மீன் கடைகள் மற்றும் பிற கடைகளில் விடுமுறை நாட்களில் வியாபாரம் களை கட்டும். நேற்று அதிகாலை 3 மணி முதல் பலத்த மழை பெய்தது. பிலிகுண்டுலு, அத்திப்பாறை, நாசிமலை, அஞ்செட்டி உள்ளிட்ட பகுதிகளில் இடி & மின்னலுடன் கனமழை பெய் ததால் காவிரில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. இதனால், ஒகேனக்கல் அருவியில் நேற்று காலை திடீரென வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. நேரம் செல்லச்செல்ல நீரின் வரத்து அதிகரித்தது. இதனால், அருவிக்கு செல்லும் நடைபாதையிலும் சுமார் 1 அடி உயரத்திற்கு செந்நிறத்துடன் தண்ணீர் பாய்ந்து சென்றது. வினாடிக்கு 16,000 கனஅடி நீர் வந்ததால் நடைபாலம் மீது கயிறு கட்டி தடுப்பு ஏற்படுத்தப்பட்டது. அருவியில் குளிக்க சுற்றுலா பயணிகளுக்கு தடை விதிக்கப்பட்டது. இதேபோல், ஆற்றிலும் குளிக்க அனுமதி மறுக்கப்பட்டது. இதனால் சுற்றுலா வந்த பயணிகள் ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றனர்.

## வறட்சியால் விவசாயிகள் தவிப்பு கும்பகோணம் வெற்றிலை விளைச்சல் குறைந்தது



கும்பகோணம்: தஞ்சை மாவட்டத்தில் பட்டீஸ்வரம், கோவிந்த குடி, ஆவூர், இனாம்கிளியூர், பண்டாரவாடை, ராஜகிரி, திருப்பூந்துருத்தி, நடுக்காவேரி, திருவையாறு, கண்டியூர் பகுதிகளில் வெற்றிலை சாகுபடி செய்யப்படுகிறது.முதல் வருடம் வெற்றிலை பதியம் போட்டால் 2 மற்றும் 3ம் வருடத்தில் மட்டும் தான் வெற்றிலையை பறிக்க முடியும். காலப்போக்கில் சாகுபடி பரப்பளவு குறைந்தது. கடந்த 10 ஆண்டுகளுக்கு முன் தஞ்சை மாவட்டத் தில் 2,000 ஏக்கர் சாகுபடி, தற்போது 500 ஏக்கரை கூட தொடவில்லை.இதற்கு காரணம் மழை, வெள்ளம் போன்ற இயற்கை சீற்றங்களின்போது இதர பயிர் வகைகளுக்கு வழங்குவதுபோல் வெற்றிலைக்கு இழப்பீடு வழங்குவதில்லை. இதற்கு காப்பீடும் கிடையாது என்பதுதான்.இது குறித்து ஆவூரை சேர்ந்த பிலவேந்திரன், தாஜூதீன் ஆகியோர் கூறுகையில், Ômுதலாண்டு அதிக செலவு செய்து பராமரித்து இலையை பறிக்க இருக்கும் நேரத்தில் சூறைக்காற்று, வெள்ளத்தால் முதலில் பாதிக்கப்படுவது வெற்றிலைதான். ஏதோ ஆண்டுதோறும் விதை நட்டோம், அறுவடை செய்தோம் என்றில்லாமல், 2, 3 ஆண்டு காத்திருக்க வேண்டியுள்ளது. காத்திருந்தா லும் போட்ட முதல் கிடைக்குமா என்றால் சந்தேகம்தான். இதனால் தான் பலர் வெற்றிலையை கைவிட்டு, பருத்தி, நெல்லுக்கு மாறிவிட்டனர் என்றனர்.இடுபொருள்களின் விலை உயர்வு, தொரூ.லா ளர் பற்றாக்குறை, போதிய விலையின்மை, அடிக்கடி ஏற்படும் இயற்கை இடர்பாடுகள் தான் இதற்கு காரணம். ஆனால், அதையும் தாண்டி ஒரு சில விவசாயிகள் வெற்றிலை சாகுபடியை மேற்கொண்டு வருகின்றனர். தற்போது வெயிலின் தாக்கம் அதிகமாக இருப்பதால் கொடிக் காலுக்கு அதிகளவு தண்ணீர் தேவைப்படுகிறது. மேலும் தொடர் மின்வெட்டால் பம்ப்செட் மூலமும் தண்ணீர் இறைக்க முடியவில்லை. வெயில் கடுமையாக இருப்பதால் வெற்றிலை சுருங்கிப்போய் உள்ளது. இதனால் விளைச் சலும் குறைவாக உள்ளது.இதன் காரணமாக வெற்றிலை விலை உயர்ந்துள்ளது. நூறு எண்ணிக்கை கொண்ட கற்பூர வெற்றிலை முன்னர் ரூ.30க்கு விற்கப்பட்டது. தற்போது ரூ.70க்கு விற்கப்படுகிறது. இதேபோல் ரூ.40க்கு விற்ற சாதாரண வெற்றிலை தற்போது ரூ.80க்கு விற்கப்படுகிறதுÕ என்றனர்.

## சிதம்பரம் பகுதியில் சாகுபடி சந்தேகம் காய்ந்து, வெடிப்பு விழுந்த நேரடி நெல் விதைப்பு நிலம்



சிதம்பரம்: காவிரி டெல்டா பகுதிகளில் அக்டோபர் 15ம் தேதிக்கு பின் தண்ணீரின் தேவை குறித்து ஆய்வு செய்வதற்காக மத்திய நீர்வள ஆணைய தலைமை பொறியாளர் குப்தா தலைமையிலான மத்திய குழுவினர் நேற்று காலை கடலூர் மாவட்டம் வந்தனர். அவர்களை வல்லம்படுகை அருகே ஆட்சியர் ராஜேந்திர ரத்னூ மற்றும் அதிகாரிகள் வரவேற்று சிதம்பரம், காட்டுமன்னார் கோவில் பாசன பகுதிக்கு அழைத்து சென்றனர். காட்டுமன்னார்கோவில் சாலையில் உள்ள துரைபாடி கிராமத்திற்கு வந்த மத்திய குழுவினர் தண்ணீர் இன்றி காய்ந்து கிடந்த நேரடி நெல் விதைப்பு நிலங்களை பார்வையிட்டனர். அப்போது விவசாயிகள் திரண்டு வந்து, தண்ணீர் இல்லாததால் விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளதாக முறையிட்டனர். பின்னர் கீழமூங்கிலடி, தில்லைநாயகபுரம், கொடிபள்ளம், நக்கரவந்தன்குடி பகுதிகளை ஆய்வு செய்த குழுவினரை சிதம்பரம் தொகுதி எம்எல்ஏ கே.பாலகிருஷ்ணன் சந்தித்து கூறியது: டெல்டா மாவட்டங்களில் ஏற்கனவே குறுவை சாகுபடியை விவசாயிகள் இழந்துள்ளனர். தற்போது சம்பா சாகுபடியும் நடத்த முடியாமல் நேரடி விதைப்பு மூலம் சாகுபடி செய்துள்ளனர். மேட்டூர், கல்லணையில் திறக்கப்பட்டுள்ள தண்ணீர் இன்னும் சிதம்பரம், காட்டுமன்னார்கோவில் பகுதிக்கு வந்து சேரவில்லை. சிதம்பரம் பகுதியில் கடலோர கிராமங்களில் ஏற்கனவே கடல் நீர் உட்புகுந்து நிலத்தடி நீர் பாதிக்கப்பட்டுள்ளது என்றார். பின்னர் பாசன விவசாய சங்க தலைவர்கள், பல்வேறு அரசியல் கட்சி தலைவர்கள் கோரிக்கை மனு அளித்தனர்.அப்போது மத்திய குழு அதிகாரி

சிவராஜன், Ôகாவிரி டெல்டா மாவட்டங்களான நாகை, தஞ்சை, திருவாரூர், கடலூர் மாவட்டங்களில் தற்போதைய நிலை குறித்து பார்வையிட்டுள்ளோம். இன்னும் 5 தினங்களில் மத்திய அரசுக்கு அறிக்கை சமர்பிக்க உள்ளோம்Õ என்றார்.விவசாயிகள் ஏமாற்றம்: சீர்காரூ. அருகே அண்ணன் பெருமாள்கோயில் கிராமத்தில் நேற்று அவர்கள் ஆய்வு செய்தனர். அங்கு நேரடி நெல் விதைப்பு செய்து தண்ணீர் இல்லாமல் காய்ந்து கிடக்கும் வயலை பார்வையிட்டனர். பயிர்கள் கருகும் நிலை ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் கண்ணீர் மல்க தெரிவித்தனர்.தொடர்ந்து ஆச்சாள்புரத்தில் மத்திய நிபுணர் குழு பார்வையிடுவதாக இருந்தது. ஆனால், அங்கு செல்லாமல் கடலூர் மாவட்டம் சென்றனர். விவசாயிகள் கருகிய பயிர்களுடன் காத்திருந்தனர். அதிகாரிகள் வராததால் ஏமாற்றதுடன் திரும்பினர்.

## வறட்சியின் பிடியில் சாத்தான்குளம் பனை மரமும் பட்டுப்போகும் அவலம்



சாத்தான்குளம்: சாத்தான்குளம் பகுதியில் வரலாறு காணாத வறட்சி நிலவுகிறது. ஆயிரக்கணக்கான பனை மரங்கள் பட்டுப்போகும் அளவுக்கு வறட்சியின் கோரப்பிடியில் சிக்கி அப்பகுதி கிராமங்களைச் சேர்ந்த மக்கள் தவிக்கின்றனர்.சாத்தான்குளம், உடன்குடி பகுதிகளில் தேரி நிலம் மிகுந்து காணப்படும். இங்கு பெய்யும் மழை சேமிப்பாகி வறட்சி காலத் தில் தாக்குபிடிக்கும். ஆனால், கடந்த சில ஆண்டுகளாகவே இங்கு மழை அளவு குறைந்து போனது. இதனால் மணிமுத்தாறு பாசன குளங்களோடு மானாவாரி குளங்களும் வறண்டன. விவசாயம்

பொய்த்து, சாகுபடி பரப்பும் சுருங்கியது.இந்த ஆண்டு இதுவரை காணாத அளவுக்கு 50க்கும் மேற்பட்ட குளங்கள் பாளம், பாளமாக வெடித்துள்ளன. பல கிராமங்களில் பொது ஆழ்குழாய் கிணறுகளில் நீர் வற்றிவிட்டது. சாத்தான்குளம் & உடன்குடி கூட்டுக்குடிநீர் திட்டம் மூலம் தண்ணீர் வழங்கும் அளவு குறைந்துள்ளது. சாத்தான்குளத்திற்கு தண்ணீர் தந்த சிறப்பூர் தேரியும் ஊற்று ஊட்டம் குன்றிவிட்டது. புல், பூண்டுகளும் அருகிவிட்டதால் ஆடு, மாடுகளை வளர்க்க முடியாமல் வந்த விலைக்கு விற்கின்றனர். பன்னம்பாறையை சேர்ந்த நயினார் கூறுகையில், ‘கால்நடைகளுக்கு தண்ணீர் மட்டுமின்றி தீவனத்துக்கும் தட்டுபாடு ஏற்பட்டுள்ளது. பசும்புற்கள் அறவே அற்றுப்போனதால் சோளத்தட்டையை தேடவேண்டியுள்ளது. பலரும் கால்நடை களை விற்றுவிட்டனர்.Õ என்றார்.குளத்துப் பாசனத்தோடு கிணற்றுப் பாசனமும் குறைந்துவிட்டது. இதனால் வயல்வெளிகள் மைதானங்களாக காட்சியளிக்கின்றன. முதலூர், கடாட்சபுரம், போலையர்புரம் உள்ளிட்ட கிழக்குப் பகுதியில் 100 ஏக்கருக்கு மேல் முருங்கைகள் பட்டுவிட்டன. சாத்தான்குளத்தில் விவசாயி கார்த்தீசபாண்டியன் கூறுகையில், ‘ஊரை சுற்றியுள்ள சுமார் 300 பம்ப் செட்டுகளுக்கு தண்ணீர் சப்ளை இல்லை. மழை பெய்யாவிட்டால் நாற்றுப்பாவ முடியாது. விவசாயம் இந்த ஆண்டும் பொய்த்துப்போகும்.Õ என்று கவலையுடன் கூறினார். வறட்சியை தாங்கி வளரும் பனைகள் கூட பட்டுவிட்டன. உச்சகட்ட வறட்சியையும் தாங்கும் பனை கள் உச்சி கருகி காட்சியளிக்கின்றன. புதுக்குளம், கருங்கடல், பழனியப்பபுரம் பகுதியில் செறிந்து வளர்ந்துள்ள பனைகள், வடலிகளில் குறுத்தோலைகளும் காய்ந்துவிட்டன. இவ்வாறு தீய்ந்துபோனால் இந்த ஆண்டு பனைத்தொழிலும் பலனின்றி போகும் என அஞ்சுகின்றனர். சாத்தான்குளத்தில் விவசாயம், கால்நடை வளர்ப்பும் பனையேற்று தொழில் களை நம்பியிருந்த இளைஞர்கள் வேலை தேடி வெளியிடங்களுக்கு செல்ல தொடங்கியுள்ளனர்.

## மின்தடை, பருவமழை தாமதம் அரிசி விலை திடீர் உயர்வு



சென்னை : மின்தடை, பருவமழை தாமதம் போன்றவற்றால் தமிழகத்தில் அரிசி விலை உயர்ந்துள்ளது. தமிழ்நாட்டில் சென்னையை தவிர மற்ற மாவட்டங்களில் 12 மணி முதல் 14 மணி நேரம் மின்தடை இருந்து வருகிறது. பருவமழை தாமதம், விளைச்சல் குறைவு, தமிழகத்துக்கு ஆந்திரா, கர்நாடகாவில் இருந்து 500 லாரிகளில் வந்த நெல் வரத்து தற்போது 5 லாரியாக குறைந்தது போன்ற காரணங் களால் அரிசி விலை அதி கரிக்க தொடங்கியுள்ளது.

அதாவது கடந்த வாரம் இட்லி அரிசி(75 கிலோ) ரூ.1900க்கு விற்கப்பட்டது. இது தற்போது ரூ.300 அதிகரித்து ரூ.2200 ஆக விற்கப்படுகிறது. அதேபோல, அதிசய பொன்னி ரூ.2000 லிருந்து ரூ.2200 ஆகவும், பாபட்லா ரூ.2400லிருந்து ரூ.2600 ஆகவும், வெள்ளை பொன்னி ரூ.2600 லிருந்து ரூ.2800 ஆகவும் விலை உயர்ந்துள்ளது.
மேலும், ரூபாலி (25கிலோ) ரூ.750லிருந்து ரூ.800, பாபட்லா(லோக்கல்) ரூ.850லிருந்து ரூ.900, பாபட்லா ரூ.900லிருந்து 950, வெள்ளை பொன்னி ரூ.1000 லிருந்து ரூ.1050 ஆகவும் விலை உயர்ந்துள்ளது.

தமிழகத்துக்கு டெல்லி, அரியானா, மத்திய பிரதேசம், உத்தரபிரதேசம் ஆகிய மாநிலங்களில் இருந்து கோதுமை இறக்குமதி செய்யப்படுகிறது. இந்த பகுதிகளில் தற்போது நல்ல விளைச்சல் உள்ளது. ஆனால், அங்கிருந்து கோதுமை வெளிநாடுகளுக்கு அதிக அளவு ஏற்றுமதி செய்யப்படுகிறது. இதனால், அரவை மில்களுக்கு கோதுமை சப்ளை வெகுவாக குறைந்துள்ளது.

இதனால் மைதா, கோதுமை போன்றவை விலை அதிகரித்து வருகிறது. அதாவது, கோதுமை (1 கிலோ) 22 லிருந்து ரூ.26, மைதா(முதல் ரகம்) ரூ.32லிருந்து ரூ.38, மைதா (2ம் ரகம்) ரூ.28 லிருந்து ரூ.32, ரவை (முதல் ரகம்) ரூ.28லிருந்து ரூ.32, ரவை (2ம் ரகம்) ரூ.24லிருந்து ரூ.28, கோதுமை மாவு (முதல் ரகம்) ரூ.26 லிருந்து ரூ.30, கோதுமை மாவு (2ம் ரகம்) ரூ.22லிருந்து ரூ.26 ஆகவும் விலை உயர்ந்துள்ளது.

இந்தோனேசியா, மலேசியா, தென் அமெரிக்கா, ரஷ்யா, உக்ரைன் போன்ற நாடுகளில் இருந்து அதிக அளவு ஆயில் இறக்குமதி ஆவதால் விலை குறைய தொடங்கியுள்ளது.
பாமாயில்(1லிட்டர் பாக்கெட்) ரூ.66 லிருந்து ரூ.56 ஆகவும், சன்பிளவர் ரூ.88 லிருந்து ரூ.72 ஆகவும், தேங்காய் எண்ணெய் ரூ.130 லிருந்து ரூ.100க்கும், தேங்காய் எண்ணெய் (2ம்ரகம்)

ரூ.100 லிருந்து ரூ.70, வனஸ்பதி ரூ.88லிருந்து ரூ.70 ஆகவும் விலை குறைந்துள்ளது என்று தமிழ்நாடு அனைத்து மளிகை வியாபாரிகள் சங்க தலைவர் எஸ்.பி.சொரூபன் தெரிவித்தார்.

## குன்னூர் ஏலத்தில் தேயிலை தூள் விலை சரிவு



குன்னூர் : குன்னூர் தனியார் ஏல மையத்தில் இந்தாண்டுக்கான 40 வது தேயிலை ஏலம் கடந்த 2 நாட்களில் நடைபெற்றது. மொத்தம் 13.03 லட்சம் கிலோ தேயிலை தூள் விற்பனைக்கு வந்தது. அதில் இலை ரகம் 9.44 லட்சம் கிலோவும், டஸ்ட் ரகம் 3.59 லட்சம் கிலோவும் அடங்கும். ஏலத்தில் குறைந்த வர்த்தகர்களே பங்கேற்றதால் 16 சதவீத தேயிலை தூள் விற்பனையாகாமல் தேக்கமடைந்து. அனைத்து ரகத்திற்கும் கிலோவுக்கு ரூ.2 வரை விலை சரிந்தது.

## நடப்பாண்டில் 4 கோடி டன் நெல் கொள்முதல்



புதுடெல்லி : இந்த ஆண்டில் 4 கோடி டன் நெல் கொள்முதல் செய்ய மத்திய அரசு திட்டமிட்டுள்ளது. மத்திய அரசின் இந்திய உணவுக் கழகம்(எப்சிஐ) மூலமாக விவசாயிகளிடம் இருந்து அரசே நேரடியாக நெல் கொள்முதல் செய்கிறது. விவசாயிகளுக்கு சந்தையில் உரிய விலை கிடைக்காது என்பதால், அரசு குறைந்தபட்ச ஆதார விலை நிர்ணயித்து கொள்முதல் செய்கிறது. இந்த ஆண்டு ஆதார விலையாக சாதாரண ரக நெல்லுக்கு குவிண்டால் ரூ.1250ம், உயர் ரக நெல்லுக்கு குவிண்டால் ரூ.1280ம்  நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

தற்போது காரிப் பருவத்தில் நெல் உற்பத்தி 6.5 சதவீதம் குறைந்துள்ளது. இப்பருவத்தில் சுமார் 8.55 கோடி டன் உற்பத்தியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்நிலையில், வழக்கம் போல் நெல் கொள்முதல் துவங்கி விட்டது. இது பற்றி, எப்சிஐ தலைவர் மற்றும் நிர்வாக இயக்குனர் அமர்சிங் கூறியதாவது:

கடந்த 2011,12ம் சந்தை ஆண்டில் 3 கோடி 50 லட்சம் டன் நெல் கொள்முதல் செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, அது ஏறக்குறைய எட்டப்பட்டது. 2012,13 சந்தை ஆண்டில் 4 கோடி டன் நெல் கொள்முதல் செய்ய திட்டமிட்டுள் ளோம். இது வரை 5 லட்சம் டன் கொள்முதல் செய்துள்ளோம். அதிகபட்சமாக பஞ்சாபிலும், அதைத் தொடர்ந்து ஆந்திரா, சட்டீஸ்கர், ஒடிசா, உ.பி, தமிழ்நாடு, மேற்கு வங்கம் ஆகிய மாநிலங்களிலும் நெல் கொள்முதல் செய்யப்படும் என்றார்.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

## இன்றைய வேளாண் செய்திகள்

08.10.2012 A.M

**கர்நாடகாவுக்கு லாரி போக்குவரத்து பாதி பு**
**கோபி கூட்டுறவு சங்கத்தில் வாழை பழம் விலை கடும் வீழ்ச்சி**
**கதலி ரக வாழை பழம் கிலோ ரூ.12–க்கு விற்பனை**

கோபிசெட்டிபாளையம், அக்.8–

கர்நாடகாவுக்கு லாரி போக்குவரத்து பாதிக்க பட்டு உள்ளதால் கோபி கூட்டுறவு சங்கத்தில் வாழை பழம் விலை கடும் வீழ்ச்சி அடைந்தது. கதலி ரக வாழை பழம் கிலோ ரூ.12–க்கு விலை போனது.

கோபி கூட்டுறவு சங்கம்

கோபிசெட்டிபாளையம் வேளா மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் வாரந்தோறும் புதன் மற்றும் சனிக்கிழமை வாழை பழங்கள் ஏலம் மூலம் விற்பனை செய்ய படுகின்றன. அதுபோல், நேற்று முன்தினம் வாழை பழம் ஏலம் நடைபெற்றது.

இந்த ஏலத்துக்கு கோபிசெட்டிபாளையம், காசிபாளையம், பங்களா புதூர், அத்தாணி, சிறுவலூர், கொள பலூர், கூகலூர், பொம்மநாயக்கன்பாளையம் மற்றும் அதனை சுற்றி ள்ள பகுதிகளை சேர்ந்த 250– க்கும் மேற்பட்ட விவசாயிகள் மொத்தம் 7 ஆயிரம் தார் வாழை பழங்களை விற்பனைக்காக கொ டு வந்தனர்.

ரூ.5 லட்சத்துக்கு...

இதில், கதலி ரக வாழை பழம் கிலோ ஒன்று 12 ரூபாய்க்கும், நேந்திரன் ரக வாழை பழம் கிலோ ஒன்று 14 ரூபாய்க்கும் விற்பனை ஆனது. செவ்வாழை பழம் தார் ஒன்று ரூ.415–க்கும், மொந்தன் ரக வாழை பழம் தார் ஒன்று ரூ.320–க்கும், ரஸ்தாளி ரகம் ரூ.400–க்கும், பூவன் ரகம் ரூ.380–க்கும், தேன்வாழை ரூ.400–க்கும், ரொபஸ்டா ரூ.250–க்கும், பச்சைநாடன் ரூ.280–க்கும் விற்பனை ஆனது.

வாழை பழங்கள் மொத்தம் ரூ.5 லட்சத்துக்கு விற்பனை ஆனது. கோபி, சத்தியமங்கலம், பெருந்துறை, திரு பூர், கோவை ஆகிய பகுதிகளை சேர்ந்த வியாபாரிகள் வாழை பழங்களை வாங்கிச் சென்றனர்.

விலை வீழ்ச்சி

தமிழகத்துக்கு காவிரியில் த ணீர் திறக்க பட்டதை க டித்து கன்னட அமை புகளின் சார்பில் கர்நாடக–தமிழக எல்லையில் போராட்டங்கள் நடந்து வருகின்றன. இதனால், தமிழகத்தில் இருந்து

எனவே, கோபி வேளா மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் இருந்து கர்நாடகா மாநிலம் மைசூர், சாம்ராஜ் நகர் ஆகிய பகுதிகளுக்கு கொ டு செல்ல படும் வாழை பழங்கள் கடந்த ஒரு வாரங்களாக ஏற்றிச் செல்ல படவில்லை.

எனவே, நேற்று முன்தினம் நடந்த ஏலத்தில் வாழை பழங்கள் விலை கடுமையாக சரிந்தது.

விவசாயிகள் பாதி பு

கடந்த ஒரு மாதத்திற்கு முன்பு ஒரு கிலோ ரூ.42–க்கு விற்பனை செய்ய பட்ட கதலி ரக வாழை பழம் நேற்று முன்தினம் ரூ.12–க்கே விற்பனை ஆனது.

இதேபோல், ரூ.28–க்கு விற்பனை ஆன நேந்திரன் ரகம் ரூ.14–க்கும், ரூ.610–க்கு விற்பனை ஆன ரஸ்தாளி ஒரு தார் ரூ.400–க்கும், ரூ.550–க்கு விற்பனை செய்ய பட்ட தேன்வாழை ரூ.400–க் கும் விலை போனது. இதனால், வாழை விவசாயிகள் மிகவும் பாதிக்க பட்டு உள்ளனர்.

**தமிழ்நாட்டில் இன்று சில இடங்களில் மழை பெய் ம்**
**வானிலை மையம் அறிவி பு**

தமிழ்நாட்டில் இன்று (திங்கட்கிழமை) சில இடங்களில் மழை பெய் ம் என்று வானிலை ஆராய்ச்சி மையம் தெரிவித்துள்ளது.

தென்மேற்கு பருவ மழை

தமிழ்நாட்டில் தென்மேற்கு பருவமழைகாலம் நடைபெற்று வருகிறது. சமீபத்தில் வங்கக்கடலில் ஆந்திரா அருகே ஏற்பட்ட தீவிர காற்றழுத்தம் காரணமாக 3 நாட்கள் தமிழ்நாட்டின் பெரும்பாலான மாவட்டங்களில் மழை பெய்தது. அதன்பின்னர் நெல்லை, தூத்துக்குடி போன்ற தென்மாவட்டங்களில் வெயில் நன்றாக அடிக்கிறது. இந்த நிலையில் வங்கக்கடலில் குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை உருவாகி இருக்கிறது.

இது குறித்து கேட்டதற்கு சென்னை வானிலை மைய அதிகாரி கூறியதாவது:–

வங்கக்கடலில் உருவான குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலைக்கும் தமிழ்நாட்டுக்கும் எந்தவிதத்திலும் தொடர்பு இல்லை.

இன்று மழை பெய் ம்

தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் இன்று (திங்கட்கிழமை) சில இடங்களில் மழைபெய் ம். சென்னையில் மாலை அல்லது இரவு சில பகுதிகளில் மழை அல்லது இடி டன்கூடிய மழைபெய் ம். இவ்வாறு அந்த அதிகாரி தெரிவித்தார்.

நேற்று காலை 8–30 மணி டன் முடிவடைந்த 24 மணிநேர மழை அளவு வருமாறு:–

செங்கம் 7 செ.மீ., பா பிரெட்டி பட்டி 6 செ.மீ., தருமபுரி, செய்யாறு தலா 5 செ.மீ., வாணியம்பாடி 4 செ.மீ., ஸ்ரீபெரும்புதூர், கரூர், ஆலங்காயம், பெனுகா டபுரம் தலா 3 செ.மீ., திருவ ணாமலை, போச்சம்பள்ளி, கொடைக்கானல், ராயக்கோட்டை, பரூர், அர மனை புதூர், வாலாஜா, சோழிங்கர், சிவகிரி, வாழ பாடி தலா 2 செ.மீ., மதுராந்தகம், போடிநாயக்கனூர், சாத்தனூர் அணை, உத்திரமேரூர், பாலக்கோடு தலா 1 செ.மீ.மழை பெய்துள்ளது.

**தி டுக்கல் மார்க்கெட்டுக்கு**
**வெளியூர் வியாபாரிகள் வராததால் பூக்கள் ஏற்றுமதி பாதி பு**
**விலை கடும் வீழ்ச்சி**

தி டுக்கல் மார்க்கெட்டுக்கு வெளியூர் வியாபாரிகள் வராததால் பூக்கள் ஏற்றுமதி பாதிக்க பட்டுள்ளது. பூக்களின் வரத்து குறைந்தும், விலை கிடக்காமல் விவசாயிகள் வேதனை அடைந்துள்ளனர்.

பூக்கள் வரத்து குறைவு

தி டுக்கல் சுற்று வட்டார பகுதிகளில் மலர் சாகுபடி அதிக அளவில் நடைபெறுகிறது. இந்த பூக்கள் அனைத்தும் தி டுக்கல் பூ மார்க்கெட்டுக்கு கொ டு வந்து விற்பனை செய்ய படுகிறது. தினமும் சராசரியாக 10 டன்கள் வரை பூக்கள் விற்பனைக்காக வரும். அதுவே விழாக்கால சீசன் என்றால் 20 டன்களுக்கு மேல் பூக்கள் குவிந்து விடும்.

இந்த நிலையில் தற்போது சுமார் 3 டன் அளவுக்கு தான் பூக்கள் வருகின்றன. பொதுவாக பூக்கள் வரத்து குறைவாக இருந்தால் விலை தாறுமாறாக எகிறிவிடும். ஆனால், பூக்களின் வரத்து குறைந்தும், விலை சொல்லிக்கொள்ளும் அளவுக்கு இல்லை. இதனால் வியாபாரிகள் பெரும் வேதனை அடைந்துள்ளனர்.

ஏற்றுமதி பாதி பு

தி டுக்கல்லை பொறுத்தவரை காக்கரட்டான் பூ தற்போது சீசன் தொடங்கி இருக் கிறது. ஆனால், எதிர்பார்த்த அளவு விற்பனை இல்லை. நேற்று ஒரு கிலோ ரூ.40–க்கு தான் விற்றது. அதேபோல் செவ்வந்தி பூக்கள் ராயக்கோட்டை, கம்பம், கூடலூர் பகுதிகளில் இருந்து வருகிறது. அந்த பூக்களுக்கும் சரியான விலை கிடைக்க வில்லை. ஒருகிலோ ரூ.40–க்கு விற்றது.

தி டுக்கல் பூ மார்க்கெட்டுக்கு அதிக அளவில் வெளியூரை சேர்ந்த வியாபாரிகள் தான் பூக்கள் வாங்க வருவார்கள். கேரளா, புதுக்கோட்டை, சேலம் உள்பட பல்வேறு பகுதிகளுக்கு பூக்கள் ஏற்றுமதி செய்ய படும். ஆனால், கடந்த சில நாட்களாக வெளியூர் வியாபாரிகள் யாரும் ஆர்வம் காட்டவில்லை.

விலை வீழ்ச்சி

இதுதவிர திருவிழா, முகூர்த்த நாள் போன்ற விசேஷ நாட்களும் இல்லை. இதனால் விவசாயிகள் பூக்களை பறித்து, மார்க்கெட்டுக்கு வருவது பெருமளவில் குறைந்து விட்டது. ஆனாலும், விலை கிடைக்காமல் வியாபாரிகள் தவித்து வருகின்றனர்.

பூ மார்க்கெட்டில் நேற்று ஒருகிலோ மல்லிகை பூ ரூ.180–க் கும், கனகாம்பரம் ரூ.200–க்கும், சாதி பூ ரூ.150–க் கும், செ டு மல்லி ரூ.20–க்கும், சம்பங்கி ரூ.30–க்கும், அரளி ரூ.20–க்கும், பட்டுரோஸ் ரூ.35–க் கும், கோழிக்கொ டை ரூ.20–க்கும், வாடாமல்லி ரூ.10–க்கும், மரிக்கொளுந்து (கட்டு) ரூ.10–க்கும், துளசி மற்றும் மருகு (கட்டு) ரூ.5–க்கும் விற்பனை ஆனது. ஐ பசி மாதம் வந்தால் ஓரளவு விலை கிடைக்கும் என்ற நம்பிக்கையில் பூ விவசாயிகளும், வியாபாரிகளும் உள்ளனர்.

**நதி ர் பங்கீடு குறித்து நிலையான சட்டம் இயற்ற வே டும்**
**காவிரி ர் பாசன விவசாய சங்க கூட்டத்தில் தீர்மானம்**

தேசிய நதி ர் பங்கீடு குறித்து நிலையான சட்டம் இயற்ற வே டும் என்று காவிரி ர் பாசன விவசாய சங்கங்களின் கலந்தாய்வு கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்ற பட்டது.

கலந்தாய்வு கூட்டம்

காவிரி ர் பாசன அனைத்து விவசாய சங்கங்களின் அவசரகால கலந்தாய்வு கூட்டம் திருச்சியில் நடைபெற்றது. காவிரி டெல்டா விவசாய சங்க தலைவர் கனகசபை தலைமை தாங்கினார். செயல் தலைவர் ராஜாராம், ஆலோசகர் நடராஜன், தீட்சிதர் பாலசு ரமணியம் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

சிற பு அழை பாளர்களாக பாரதீய கிசான் சங்க மாநில துணை தலைவர் அய்யாக ணு, தமிழ்நாடு காங்கிரஸ் விவசாய சங்க மாநில துணைத்தலைவர் புலியூர் நாகராஜன், மாவட்ட தலைவர் ஜி.கே.முரளி, உய்யகொ டான் வாய்க்கால் கூட்டமை பு தலைவர் ரத்தினகிரி, தமிழக விவசாயிகள் சங்க மாநில செயலாளர் ராஜாசிதம்பரம், ர்ச்சாலை இயக்க தலைவர் ஹேமநாதன், வாழை விவசாயிகள் சங்க செயலாளர் அஜீதன் உள்பட பலர் கலந்து கொ டனர்.

காவிரி நதி ர் ஆணையம்

காவிரி நதி ர் ஆணையத்தை மாதந்தோறும் கூட்ட வே டும். காவிரி நதி ர் ஆணையம் வலுவாக செயல்பட தென்னகத்தில் ஒரு அலுவலகம் அமைக்க பட வே டும். தென்னக நதிகளை இணைக்க வே டும்.

வினாடிக்கு 9 ஆயிரம் கனஅடி த ணீர் மட்டும் போதாது. 2 டி.எம்.சி. த ணீரை திறந்து விட வே டும். தேசிய அளவில் நதி ர் பங்கீடு குறித்து நிலையான சட்டம் இயற்ற வே டும் என்பது உள்பட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்ற பட்டன.

**காவிரி ர்பிடி பு பகுதிகளில் கனமழை**
**மேட்டூர் அணைக்கு ர்வரத்து அதிகரி பு**
**வினாடிக்கு 30 ஆயிரம் கன அடி வீதம் வருகிறது**

காவிரி ர்பிடி பு பகுதிகளில் கனமழை பெய்து வருவதால், மேட்டூர் அணைக்கு ர்வரத்து அதிகரித்துள்ளது. அணைக்கு வினாடிக்கு 30 ஆயிரம் கனஅடி வீதம் த ணீர் வருகிறது.

மேட்டூர் அணை

தென்மேற்குபருவமழை தீவிரம் அடையாததால் மேட்டூர் அணைக்கு ர்வரத்து குறைந்தது. இதன் காரணமாக அணைக்கு வினாடிக்கு 1,000 முதல் 2,500 கனஅடி வரையே த ணீர் வந்துகொ டு இருந்தது. ர்வரத்து குறைந்த நிலையில் அணையின் ர் இரு பும் குறைவாக இருந்ததால் டெல்டா பாசனத்துக்கு த ணீர் திறக்க பட வே டிய தேதியான கடந்த ஜூன் 12–ந்தேதி த ணீர் திறக்க படவில்லை.

இரு பினும் வடகிழக்கு பருவமழை கைகொடுக்கும் என்ற வானிலை ஆராய்ச்சியாளர்களின் ஆலோசனையை ஏற்று கடந்த செ டம்பர் 17–ந் தேதி டெல்டா பாசனத்துக்காக த ணீர் திறந்து விட பட்டது. பாசனத்துக்காக த ணீர் திறந்து விட பட்டதால், அணையின் ர்மட்டம் மளமளவென குறைந்து கொ டே வந்தது.

சு ரீம் கோர்ட்டு உத்தரவு

இதனால் தமிழக அரசு சு ரீம் கோர்ட்டில், கர்நாடகத்தில் இருந்து தமிழகத்துக்கு த ணீர் திறக்க உத்தரவிட வே டும் என்று மனுதாக்கல் செய்தது. இதையடுத்து சு ரீம் கோர்ட்டு உத்தரவுபடி கர்நாடக அணைகளில் இருந்து கடந்த சில நாட்களாக வினாடிக்கு 9 ஆயிரம் கனஅடி வீதம் த ணீர் திறந்து விட பட்டு வருகிறது.

இந்த 9 ஆயிரம் கனஅடி ர் மேட்டூர் அணைக்கு வந்தாலும், டெல்டா பாசனம் மற்றும் குடி ர் பயன்பாட்டிற்காக அணையில் இருந்து வினாடிக்கு 14,700 கனஅடி வீதம் த ணீர் திறந்து விட படுவதால் அணையின் ர்மட்டம் மளமளவென சரிந்து வருகிறது.

ர்வரத்து அதிகரி பு

இந்த நிலையில் நேற்று முன்தினம் இரவு காவிரி ர்பிடி பு பகுதிகளில் கனமழை பெய்தது. இதன் காரணமாக மேட்டூர் அணைக்கு ர்வரத்து அதிகரித்துள்ளது. நேற்று காலை அணைக்கு வினாடிக்கு 10 ஆயிரம் கனஅடி வீதம் வந்த த ணீர், மாலை வினாடிக்கு 30 ஆயிரம் கனஅடியாக அதிகரித்தது. இதனால் குறைந்து வந்த மேட்டூர் அணையின் ர்மட்டம் மீ டும் உயரத்தொடங்கி உள்ளது.

நேற்று மாலை நிலவர படி மேட்டூர் அணையின் ர்மட்டம் 71.10 அடியாக இருந்தது. அணைக்கு வினாடிக்கு 30 ஆயிரம் கனஅடி வீதம் த ணீர் வந்து கொ டிருந்தது. அணையில் இருந்து வினாடிக்கு 14,700 கனஅடி வீதம் த ணீர் திறந்து விட படுகிறது. காவிரி ர் பிரச்சினை ஏற்பட்டுள்ள தற்போதைய நிலையில், வருணபகவான் ஓரளவுக்கு கைகொடுத்து உள்ளது டெல்டா விவசாயிகளை மகிழ்ச்சியடைய செய்துள்ளது.